**அசல் வழக்கு எண் : 93 /2018**

**நாள்: 30.06.2026**

**பி.வா.சா.1 - வஜ்ஜிரம் த/பெ. பெருமாள்**

**இரு தரப்பினரும் ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை**

1) **எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் தெரியாது. எனக்கு எத்தனை மகன்கள் என்றால், இரண்டு மகன்கள். என்னுடைய மகன் ஒருவர் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர் என்றால், கொலை வழக்கில் சந்தேகப்படுகின்ற நபராக உள்ளார். வழக்கு சொத்து விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. இவ்வழக்கை யார் என் மீது தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், ராஜேந்திரன் தாக்கல் செய்துள்ளார்.**

2) **எனது உடன் பிறந்த ஒரு அண்ணனின் பெயர் தங்கவேல் என்றால் சரிதான். எனது அண்ணன் தங்கவேலின் மகன்தான் இவ்வழக்கின் வாதியான ராஜேந்திரன் என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள என் பதிலுரையின் சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதி ராஜேந்திரன் தாவா சொத்தை விலைக்கு வாங்கியது மோசடி என நான் கூறியுள்ளேனா என்றால் இல்லை. ராஜேந்திரன் கிரய ஆவணமானது நடைமுறைக்கு வரவில்லை என நான் கூறியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என நான் வழக்கு எதுவும் ராஜேந்திரன் மீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் கூறுவது தவறு என்றாலும், வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என நான் ராஜேந்திரன் மீது வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.**

3) **யு.டி..ஆர் எனப்படும் நிலவுடைமை மேம்பாட்டுத்திட்டம் எக்காலத்தில் நடைபெற்றது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. குள்ளு, கோபால், சுப்பிரமணியம் மற்றும் பெருமாள் ஆகிய நால்வரும் வழக்கு சொத்து தொடர்பாக யார் மீதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு முந்தைய யு.டி.ஆர் விவரம், பிந்தைய யு.டி.ஆர் விவரம் எனக்கு தெரியுமா என்றால், 60 சென்ட் நிலமானது மாரியம்மாளுக்கும், 33 சென்ட் நிலமானது எனக்கும் பாத்தியப்பட்டது. மேற்படி மாரியம்மாள் என்பவர் எனது தாயார் என்றால் என் தாயார் பெயர் மாரி ஆகும். மாரியம்மாள் என்பவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால், 6 குழந்தைகள்-ராஜி, தங்கவேலு, பழனி, அப்பாதுரை, வஜ்ஜிரம், வெங்கடாசலம் ஆகும். மாரியம்மாளின் 6 குழந்தைகள் 60 சென்ட் நிலத்தை பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை. 33 சென்ட் நிலம் எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எனக்கு 33 சென்ட் நிலம் எனக்கு பாத்தியம் என்பதற்கான எந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன் என்றால், பத்திரம் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன்.**

4) **60 சென்ட் நிலம் மாரியம்மாளுக்கு பாத்தியம் என என்ன ஆவணத்தை நான் ஒப்படைத்துள்ளேன் என்றால், அதற்கான ஆவணத்தை நான் ஒப்படைக்கவில்லை. மேற்படி 60 சென்ட் மற்றும் 33 சென்ட் நிலத்திற்கான முறையான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.**

5) **இவ்வழக்கு சொத்து விவரம்-புல எண்.299/7,0.38 ஹெக்டர் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் முழு விஸ்தீரணம் 94 சென்ட் என்றால் தவறு ஆகும். வழக்கு சொத்து எப்போது எந்த சர்வே எண்ணுடன் ஒரே லாட்டாக இணைக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் ஒரே லாட்டாக**

இணைக்கப்படவில்லை. வழக்கு சொத்து ஒரே லாட்டாக இணைக்கப்பட்டது என நான் கூறியிருந்தாலும், அது தவறு என்றாலும், 7 என்னுடையது, 8 மாரியின் உடையது, அது இணைக்கப்படவில்லை.

6) பொன்னியம்மாள், பெருமாள், குள்ளப்பன், சுப்பிரமணி இவர்களுக்கு வழக்கு சொத்து பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்களை எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பெருமா அம்மாள் என்பவர் கிரயம் பெற்றதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால், பெருமாளிடமிருந்து நான் கிரயம் பெற்றதற்கான ஆவணத்தை ஒப்படைத்துள்ளேன். எனது ஊரில் பெரியா கவுண்டர் மகன் கோவிந்தன் என்பவர் உள்ளார் என்றால், சரிதான். பெரியாகவுண்டர் மகன் கோவிந்தனுடைய மகன் சின்னசாமி என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கு மேற்படி கோவிந்தன் பெயரில் பட்டா வந்தது என்றால், யு.டி.ஆரில் தான் மாறியுள்ளது. யு.டி.ஆரில் வழக்கு சொத்து கோவிந்தன் பெயரில் மாறியதற்கு வருவாய்துறையில் யாரும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

7) மேற்படி கோவிந்தன் பெயரில் யு.டி.ஆரில் பட்டா பெற்ற பின்பு நான் அவரிடமிருந்து இவ்வழக்கு சொத்தில் 8 சென்ட் நிலத்தை கிரயம் பெற்றேன் என்றால், மாரியம்மாள் பெயரிலிருந்து தவறுதலாக தன் பெயருக்கு பட்டா வந்ததாக கூறி கோவிந்தன் என் பெயருக்கு கிரயம் செய்து கொடுத்தார். வழக்கு சர்வே எண்ணில் கோவிந்தன் என்பவரிடமிருந்து 8 சென்ட் நிலத்தை நான் கிரயம் பெற்றதற்கான பத்திரம் என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 தான் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7ல் எங்காவது மாரி பெயரிலிருந்து தவறுதலாக என் பெயரில் பட்டா பெற்றதால் உங்கள் பெயருக்கு கிரயம் செய்து தருவதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.7ல் புஞ்சை நிலத்தை ரூபாய் 3700/-க்கு கிரயம் பெற்றதாகத்தான் எழுதப்பட்டுள்ளது என்றால் நாங்கள் பணம் கொடுக்கவில்லை, அவர் வாங்கவும் இல்லை. தவறுதலாக பட்டா பெற்றதால் எழுதிக்கொடுக்கப்பட்டது. பி.வா.சா.ஆ.7ல் புஞ்சை நில சுத்தக்கிரயம் ரூபாய் 3700/- என குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரிதான்.

8) பி.வா.சா.ஆ.7 ஆனது ரூபாய் 3700/-க்கு சுத்தக்கிரயம் என எழுதப்பட்டுள்ளது தவறு என்பதால் செல்லாது என்றால் செல்லாது. பி.வா.சா.ஆ.7 ல் 8 சென்ட் நிலத்திற்கு குறிப்பிடப்பட்டுள்ள செக்குபந்தி விவரத்தை குறிப்பிட இயலுமா என்றால் அப்படி சொல்லி கிரயம் பெறவில்லை. ஆக பி.வா.சா.ஆ.7ல் சொத்து விவரத்தில் உள்ள செக்குபந்தி விவரம் எனக்கு தெரியாது என்றால், கிழக்கு கோவிந்தன் நிலம், மேற்கில் என் நிலம், தெற்குபுறம் ஓடை, வடக்குபுறம் ஓடை ஆகும். பி.வா.சா.ஆ.7ல் எனக்கு கோவிந்தன் விற்பனை செய்த 8 சென்ட் நிலம் போக அதன் கிழபுறத்தில் மீதமுள்ள நிலத்தை கோவிந்தன் தன் பெயரில் வைத்துக்கொண்டார் என்றாலும், 60 சென்ட் நிலமானது மாரியம்மாள் பெயரில்தான் உள்ளது. பி.வா.சா.ஆ.7ல் கோவிந்தன் ஆகிய என்னிட மீதி நிலத்திற்கு மேற்கு என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறா என்றால் கோவிந்தன் பெயரில் நிலம் இல்லை.

9) பி.வா.சா.ஆ.6 ஆனது 2001ம் ஆண்டு நான் பெருமா அம்மாள் குடும்பத்தாரிடமிருந்து கிரயம் பெற்ற பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பெருமா அம்மாளுக்கு அரூர் சார்பதிவக ஆவண எண்.2038/1973படி பாத்தியப்பட்ட சொத்தை அவர் எனக்கு விற்பனை செய்தார் என்றால் சரிதான். மேற்படி கிரயம் பெற்றதற்கான சொத்தின் மூல ஆவணமான 2038/1973ஐ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், தாக்கல் செய்துள்ளேன். மூல ஆவணமான 2038/1973ஐ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது அரூர் சார்பதிவகத்தில் கடந்த 1973ம் ஆண்டில் மேற்படி பெருமா அம்மாள் பெயரில் 2038 என்ற ஆவண எண்

கொண்ட பத்திரம் என்றால் தெரியாது. அரூர் சார்பதிவக ஆவண எண்.2038/1973 படி பெருமா அம்மாளுக்கு பி.வா.சா.ஆ.6 ஆனது பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல.

10) மேற்படி பெருமா அம்மாள் குடும்பத்தாரிடமிருந்து 2001ம் ஆண்டில் நான் பி.வா.சா.ஆ.6 மூலமாக கிரயம் பெற்றது வழக்கு சர்வே எண்ணில் 8 சென்ட் என்றால் சரிதான்.

11) கடந்த 24.08.2009 அன்று பி.வா.சா.ஆ.7 மூலமாக நான் கோவிந்தன் என்பவரிடமிருந்து கிரயம் பெற்ற நிலமானது வழக்கு சர்வே எண்ணில் 8 சென்ட் என்றால் சரிதான். ஆக ஒரே சொத்தை பெருமாள அம்மாள் வகையறாவிடமிருந்தும், கோவிந்தன் என்பவரிடமிருந்தும், பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆகியவை மூலமாக நான் இரு கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். குள்ளு என்பவருக்கு 8 சென்ட், கோபால் என்பவருக்கு 8 சென்ட், பெருமாளுக்கு 8 சென்ட், சுப்பிரமணிக்கு 8 சென்ட் ஆகும். குள்ளு, கோபால், பெருமாள் மற்றும் சுப்பிரமணிக்கு தலா 8 சென்ட் என கூறும் நான் எதன் அடிப்படையில் பெருமா அம்மாள் வகையறாவிடமிருந்தும், கோவிந்தன் என்பவரிடமிருந்தும் பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆகியவையை வாங்கினேன் என்றால், குள்ளு என்பவரிடமிருந்து பெருமா வாங்கினார். பெருமா என்பவரிடமிருந்து விலைக்கு கிரயம் பெற்றேன். மாரியம்மாள் பெயரில் இருந்த நிலம் கோவிந்தன் பெயரில் இருந்ததால் கோவிந்தன் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினேன். வழக்கு சர்வே எண்ணில் 8 சென்ட் நிலத்தை பெருமா அம்மாள் என்பவரிடமிருந்தும், கோவிந்தன் என்பவரிடமிருந்தும் விலைக்கு பெற்றுள்ளேன், அவற்றில் எந்த பத்திரம் உண்மை என்றால், இரண்டும் உண்மைதாக். பெருமா அம்மாள் குடும்பமும், கோவிந்தன் குடும்பமும் ஒரே குடும்பம் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.7 ஆகியவையை விற்பனை செய்தவர்களின் உரிமையை ஏற்றுக்கொண்டுதான் அவர்களிடமிருந்து நான் கிரயம் பெற்றேன் என்றால் கோவிந்தன் என்பவர் பெயரில் தவறுதலாக வந்துவிட்டதாக கூறி அவர் விற்பனை செய்தார். நான் கூறுகின்ற மாரி என்பவர் ஆணா பெண்ணா என்றால் பெண்.

12) மேற்படி மாரி என்பவர் கோவிந்தன் பெயரில் பட்டா மாறியதற்கு எவ்விதமான ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல குள்ளு, கோபால், சுப்பிரமணி மற்றும் பெருமாள் ஆகியோர் கோவிந்தன் பெயரில் பட்டா மாறியதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மாரியின் குடும்பமோ அல்லது கோவிந்தனின் குடும்பமோ அல்ல என்றால் சரிதான். ஆகையால் கோவிந்தன் பெயரில் மாறிய பட்டாவை ஆட்சேபணை செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதான்.

13) எனது மனைவியின் பெயர் விஜயா என்றால் சரிதான். எனது மனைவி விஜயா இவ்வழக்கு சொத்து சம்பந்தமாக கடந்த 08.05.2023 அன்று மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த மனுவின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அனிதா என்பவர் விசாரணை செய்தார் என்றால் சரிதான். விசாரணையை அடுத்து மேற்படி மனுவின் மீது அவர் உத்தரவு பிறப்பித்தார் என்றால், சரிதான் (வா.சா.ஆ5). நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் அங்கு சென்று பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அந்த உத்தரவின் மீது நானும், எனது மனைவியோ மேல்முறையீடு செய்யவில்லை என்றால் இல்லை. மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவின் படி நானோ, எனது மனைவியோ நீதிமன்றத்தில் ஏதேனும் பரிகாரம் கோரி வழக்கு செய்தோமா என்றால் இல்லை. மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தவை நானும் எனது மனைவியும் ஏற்றுக்கொண்டதால்தான் நாங்கள் தனியாக வழக்கு செய்யவில்லை என்றால் நீதிபதி என்ன கூறுகிறாரோ அதன்படி செல்வதாக இருந்துவிட்டோம்.

14) எனது பிரமாண வாக்குமூலத்தில், பத்தி 5ல் "எனக்கு என் தாய் தந்தையர் மூலமும், எனக்கு கிரயம் மூலமும் பாத்தியப்பட்டு" என கூறியுள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு நிலம் அவ்வாறு எனக்கு பாத்தியம் என்றால் 33 சென்ட் நிலம்தான் பாத்தியமாகும். வழக்கு சர்வே எண்ணில் 33 சென்ட் நிலம் எனக்கு பாத்தியம் என்பதற்கான ஆவணத்தையும், கிரய ஆவணத்தையும், நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வழக்கு சர்வே எண்ணில் 33 சென்ட் நிலமானது 50 ஆண்டுகளுக்கு மேலாக எனக்கு பாத்தியம் என சொல்லப்பட்டதற்கு, 50 ஆண்டுகளுக்கான மேற்படி நிலத்தின் கந்தாய ரசீது, அடங்கல், சிட்டா, அ-பதிவேடு ஆகியவற்றை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

15) வழக்கு சர்வே எண்ணில் 33 சென்ட் நிலமானது எனக்கு பாத்தியம், அனுபவம், கிரயம் என கூறி நீதிமன்ற கட்டணம் செலுத்தி எதிரிடை கோரிக்கை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கு என் பெயரிலும், வாதி ராஜேந்திரன் பெயரிலும், கூட்டுப்பட்டா உள்ளது என்றால், சாட்சியானவர் முதலில் இல்லை என கூறிவிட்டு, தற்போது உள்ளது என கூறுகிறார். நான் கோவிந்தனிடமிருந்து கிரயம் பெற்ற பி.வா.சா.ஆ.7 ன் அடிப்படையில் என் பெயரிலும், வாதி ராஜேந்திரன் பெயரிலும் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 மூலமாக 8 சென்ட் நிலத்தை எனக்கு விற்பனை செய்த பின்னர், கோவிந்தன் தனது மீதி நிலத்தை தனது மகன் சின்னசாமிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால், அதுக்குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கு சங்கதியின் அடிப்படையில், ஆவணங்களின் அடிப்படையிலும், மேற்படி தானசெட்டில்மெண்ட் குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றால், வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் தெரியும். மேற்படி தானசெட்டில்மெண்ட்-ஐ அனுசரித்து சின்னசாமி வழக்கு சொத்தை வாதி பெயரில் கிரயம் செய்துகொடுத்தது, வழக்கு தாக்கல் செய்த பின்னர் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சர்வே எண்ணில் நான் 8 சென்ட் நிலத்தை கிரயம் பெற்ற கோவிந்தனும், வாதி தாவா சொத்தை கிரயம் பெற்ற சின்னசாமியும் தந்தை மகன் என்றால் சரிதான். ஆக வழக்கு சர்வே எண்ணில் நானும், ராஜேந்திரனும் சட்டப்படியான உரிமையாளர்களிடமிருந்துதான் கிரயம் பெற்றுள்ளோம் என்றால் அவர்கள் வாங்கியது எனக்கு தெரியாது, நான் சட்டப்பூர்வமாக வாங்கியுள்ளேன்.

16) வழக்கிற்கு பின்னிட்டு கோவிந்தன் சின்னசாமிக்கு எழுதிய தானசெட்டில்மெண்ட் பத்திரம், சின்னசாமி வாதிக்கு எழுதிய கிரய ஆவணம் ஆகியவை செல்லாது என்றோ, அவை எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் 33 சென்ட் நிலத்தை கட்டுப்படுத்தாது என்றோ, நான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்குறித்து ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரமும், வாதியின் பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரமும், சட்டபூர்வமானவை என்பதால்தான் நான் எவ்வித நடபடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால், அவர் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது.

17) வழக்கு சொத்துக்கு மேற்கு புறத்தில் ஒரு மலை உள்ளது என்றாலும், கிழுபுறத்தில் வழக்கு சொத்தின் மீதி நிலம் உள்ளது என்றால் 8ம் நெம்பர் நிலமும், தெற்கும், வடக்கும் ஓடை உள்ளது என்றாலும் சரிதான். இவ்வழக்கு சொத்தில் நான் கோவிந்தனிடமிருந்து கிரயம் பெற்ற 8 சென்ட் நிலமானது (பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.7) நிலமானது மலைக்கு கிழக்குபுறத்தில் உள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள 86 சென்ட் நிலமானது (வழக்கு சொத்து) நான் கிரயம் பெற்ற மேற்படி 8 சென்ட் நிலத்திற்கு கிழுபுறத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

18) இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் நீதிமன்றத்திலிருந்து வழக்கு சொத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையர் வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்ய வந்தபோது எனது வழக்கறிஞரும் என்னுடன் இருந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மேற்படி 8 சென்ட் நிலத்தில்

நான் சாமந்தி பூ சாகுபடி செய்திருந்தேன் என்றால் 33 செனட் நிலத்திலும் சாமந்தி பூ சாகுபடி செய்திருந்தேன். மேற்படி அளவீட்டின் போது ராஜேந்திரன் கிரயம் பெற்ற சொத்தில் 15 செனட் நிலத்தை நான் ஆக்கிரமிப்பு செய்த விவரம் தெரிய வந்தது என்றால், நான் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. வழக்கு சொத்தின் மேற்குபுறம் 15 செனடில் வில்லை வீடு, மாட்டுக்கொட்டகை, குளியலறை ஆகியவை எந்த காலத்தில் கட்டியது என்ற விவரத்தை நான் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

19) மேற்படி ஆக்கிரமிப்பு பகுதியான 15 செனட் நிலத்தை தனக்கு விடவேண்டும் என வாதி மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. வாதி தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் வழக்குரையானது திருத்தப்பாடு செய்த விவரம் எனக்கு தெரியாது என்றால், தெரியாது. இவ்வழக்கில் வாதி கோரியுள்ள சுவாதீன பரிகாரத்திற்கு எவ்விதமான கூடுதல் பதிலுரையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நிலத்தை அளவீடு செய்தபோது நான் கிரயம் பெற்ற 8 செனட்நிலத்தையும் தனியாக அளவீடு செய்யக்கோரி நிலஅளவையரிடம் கேட்டுக்கொண்டேன் என்றால் இல்லை.

20) வழக்கு சர்வே எண்.299/7 மற்றும் 299/8 ஆகியவை எப்போது இணைக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பெருமா அம்மா என்பவரிடமிருந்து விலைக்கு வாங்குவதற்கு முன்னதாகவும், (பி.வா.சா.ஆ.6), மற்றும் கோவிந்தனிடமிருந்து விலைக்கு வாங்குவதற்கு முன்னதாகவும் (பி.வா.சா.ஆ.7), நான் வழக்கு சொத்திற்கு உரிமையானவர் அல்ல என்றால் சரியல்ல, எனது தாய் தந்தையர் பெயரில் கிரய ஆவணம் உள்ளது. வழக்கு சொத்துக்குறித்து எனது தாய் தந்தையர் பெயரில் கிரய ஆவணம் இருக்கும்பொழுது எதற்காக நான் மேற்படி நபர்களிடமிருந்து கிரயம் பெற்றேன் என்றால், மாரி ஆகிய எனது தாயார் பெயரில் இருந்த நிலம் கோவிந்தன் பெயரில் பட்டா ஏற்பட்டுவிட்டதால் விலைக்கு வாங்கினேன். எனது தாய் மாரி பெயரிலிருந்து வழக்கு சொத்துக்கு கோவிந்தன் பெயரில் பட்டா மாறுதல் ஏற்பட்டதற்கு நானோ, எனது குடும்பத்தினரோ எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அவர் மாறியுள்ளதாக தெரிவித்ததை அடுத்துதான் கிரய ஆவணம் ஏற்படுத்திக்கொண்டோம் (பி.வா.சா.ஆ.7). மாரி பெயரிலிருந்து கோவிந்தன் பெயருக்கு பட்டா மாறுதல் ஆனதை நான் ஏற்றுக்கொண்டதால்தான் பி.வா.சா.ஆ.7 ஆனது எழுதப்பட்டது என்றால் சரிதான்.

வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியின் குறுக்கு விசாரணையானது அதன் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்:-செல்வி.M.சரண்யா, B.A.,LL.B.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பாப்பிரெட்டிப்பட்டி.